**சுருக்கம்**

திட்டங்கள் – மாநிலத் திட்டம் – "தன்னிறைவுத் திட்டம்" – 2016–2017–ஆம் ஆண்டிற்கான திட்டத்தினை செயல்படுத்துதல் – 50 கோடி ரூபாய் நிதி ஒப்பளிப்பு மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் – ஏற்பளித்தல் – ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அதி–1)த் துறை**

**அரசாணை(நிலை) எண்.113** நாள்: 23.09.2016

படிக்கப்பட்டவை.

1. அரசாணை (நிலை) எண். 82, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி–1)த் துறை, நாள் 1.11.2011.

2. அரசாணை (நிலை) எண். 63, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி–1)த் துறை, நாள் 27.07.2012.

3. அரசாணை (நிலை) எண். 51, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி–1)த் துறை, நாள்: 5.06.2013

4. அரசாணை (நிலை) எண். 95, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி–1)த் துறை, நாள் 31.07.2014.

5. அரசாணை (நிலை) எண். 65, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி–1)த் துறை, நாள் 24.04.2015.

6. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதம் ந.க.எண். 39631 / 2016 / SSS-1, நாள் 06.07.2016.

---

**ஆணை:**

ஊரகப் பகுதி மக்களின் சுய சார்புத் தன்மை மற்றும் அவர்களின் பொது மக்கள் பங்கேற்பு ஆகியவற்றை ஊக்குவிப்பதற்காக, தமிழக அரசு 2011–2012–ல் தன்னிறைவுத் திட்டத்தினை மீண்டும் அறிமுகப்படுத்தியது. இத்திட்டம் ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. கண்டறியப்பட்ட பணிக்கான மதிப்பீட்டு செலவில் மூன்றில் ஒரு பங்கிற்கு குறையாமல் பொது மக்கள் பங்களிப்பாக அளிக்க வேண்டும். மேலே முதலாவதாகப்

படிக்கப்பட்ட அரசாணையில் 2011–12–ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கான ஆணைகளும் விரிவான வழிகாட்டு நெறிமுறைகளும் வெளியிடப்பட்டன.

2. மேலும், மேலே இரண்டு, மூன்று, நான்கு மற்றும் ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட அரசாணைகளில் முறையே, 2012–2013, 2013–2014, 2014–2015 மற்றும் 2015–2016–ஆம் ஆண்டுகளில் இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கான ஆணைகளும் விரிவான வழிகாட்டு நெறிமுறைகளும் வெளியிடப்பட்டன.

3. மேலே படிக்கப்பட்ட 6–ல் உள்ள கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், 2016–2017–ம் நிதி ஆண்டில் தன்னிறைவுத் திட்டத்தினை செயல்படுத்துவதற்குத் தேவையான வரைவு வழிகாட்டு நெறிமுறைகளுடன் செயற்குறிப்பினை அனுப்பி, 2016–2017–ஆம் ஆண்டில் தன்னிறைவுத் திட்டத்தினை செயல்படுத்துவதற்கு உரிய ஆணைகள் வழங்குமாறும் மற்றும் இத்திட்டத்தினை செயல்படுத்திட உரிய தொகையை ஒதுக்கீடு செய்யுமாறும் அரசினைக் கோரியுள்ளார்.

4. 2016–2017–ம் ஆண்டில் தன்னிறைவுத் திட்டத்தினை செயல்படுத்துவதற்கான ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு கவனமாக பரிசீலனை செய்து, அவற்றை ஏற்றுக்கொள்வதென முடிவு செய்து அதன்படி, பின்வருமாறு ஆணையிடுகிறது:-

(i) 2016–2017–ஆம் ஆண்டில் தன்னிறைவுத் திட்டத்தினை செயல்படுத்துவதற்காக தற்சமயம், ரூ. 50 கோடி (ரூபாய் ஐம்பது கோடி மட்டும்) ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

(ii) 2016–2017–ஆம் ஆண்டில் தன்னிறைவுத் திட்டத்தினை செயல்படுத்துவதற்கான விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் இவ்வரசாணையின் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

5. மேலே பத்தி 4(i)-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்புகளில் பற்று வைக்கப்படும்

"2515.00 – ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் – 800 ஏனைய செலவினங்கள்– பனியிரண்டாவது ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JW தன்னிறைவுத் திட்ட செயலாக்கம் – 09 உதவி மானியங்கள் –03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான மானியங்கள் "

(த.தொ.கு 2515 00 800 JW 0934)

6. மேலே பத்தி 4(i)-ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று மாவட்டங்களுக்கு விடுவிக்க ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. மேலும், அவர் 2016–2017–ஆம் ஆண்டில் தன்னிறைவுத் திட்டத்தினை செயல்படுத்தியமைக்கான பயனீட்டுச் சான்றிதழை அனுப்புமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.